©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 127] CHENNAI, THURSDAY, MAY 5, 2011
Chithirai 22, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.**

**திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. 1071/2010/அ2)*

**No. VI(2)/272(a-1)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ப. மலர்விழி என்பவர் வல்லம் ஊராட்சி நிதி கணக்கிலிருந்து ரூ. 6,72,132/– நிதி முறைகேடுகள் செய்துள்ளமைக்காகவும், ஊராட்சியில் தெரு குழாய் பராமரிப்புக்காக உபகரணங்கள் மதிப்பீடுகள் இல்லாமலும், ஒப்பந்த விதி பின்பற்றாமலும், தொழில்நுட்ப அங்கீகாரம் பெறாமலும் உபகரண விவரம் உரிய பதிவேடுகளுக்கு கொண்டு செல்லாமலும் ரூ. 15,550/– செலவினம் மேற்கொண்டமைக்காகவும் செலவு சீட்டு எண் 90/18–01–2010–ன்படி 12/2009–ம் மாதத்திய ஊதியம் மற்றும் இதர படிகளுக்குண்டான தொகை ரூ. 16,925/– வழங்கியமைக்கான படிவம் 14–ல் ஒப்புதல் பெறாததற்காகவும் ஊராட்சியில் தெரு விளக்கு பராமரிப்புக்காக உபகரணங்கள் விலைப்புள்ளிகள் பெற்று ஒப்பு நோக்காமலும் தரச்சான்று விவரம் இல்லாமலும் உபகரண விவரம் உரிய பதிவேடுகளுக்கு கொண்டு செல்லாமலும் ரூ. 37,283/– செலவினம் மேற்கொண்டமைக்காகவும் அவரின்மீது 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் நிதி முறைகேடுகள் செய்து ஊராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளதும் ஊராட்சி நிர்வாக அலுவலர் / ஊராட்சி மன்றத்தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளதும் நிரூபணமாகிறது என எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 உட்பிரிவு (11)–ன்படி, ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வல்லம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ப. மலர்விழி என்பவரை வல்லம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2011 மே 4.

**மு. ராஜேந்திரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

**திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், கல்யாணபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. 3143/2010/அ2.)*

**No. VI(2)/272(a-2)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், கல்யாணபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி சி. ரத்தினா என்பவர் அரசாணை எண் 203, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (PR.I) துறை, நாள்: 20–12–2007–க்கு முரணாக எவ்வித மதிப்பீடுகளோ அல்லது அளவுப் புத்தகங்களோ இன்றி பற்றுச் சீட்டுகள் (கைச் சீட்டு) மூலம் ரூ. 1,14,825/– செலவினம் மேற்கொண்டமைக்காகவும் துணை செலவு சீட்டுகள் இல்லாமல் ரூ. 1,75,500/– செலவினம் மேற்கொண்டமைக்காகவும் ஊராட்சி நிதி கணக்கு தவிர பிற கணக்குகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வுக்கு ஆஜர்படுத்தாமைக்காகவும் அவரின்மீது 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் நிதி முறைகேடுகள் செய்து ஊராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளதும் ஊராட்சி நிர்வாக அலுவலர்/ஊராட்சி மன்றத்தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளதும் நிரூபணமாகிறது என எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 உட்பிரிவு (11)–ன்படி, ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கல்யாணபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி சி. ரத்தினா என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2011 மே 4.

**மு. ராஜேந்திரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.